# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

<u>ஆணை நாள்</u> **<u>05.06.2025</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 4272/SCIC/2023</u>**

திரு P.N. William Thangaraj — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
1 எண் இணை சார்பதிவாளர்,
1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்,
மதுரை (தெற்கு).

--- பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்,
காவல் துணை ஆணையாளர் அலுவலகம்,
மதுரை.

**<u>ஆணை</u>**

இவ்வழக்கு ஏற்கனவே 03.04.2025 அன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

- **மதுரை தெற்கு 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1171/2005 என்பதில் ஆவணம் எழுதிக்கொடுத்த நபர்களான**

M. பாஸ்கரன் மற்றும் A. பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் மீது மதுரை (தெற்கு) 1 எண் இணை சார்பதிவாளரால் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட FIR நகலினை மனுதாரர் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் 29.10.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதில் மனுதாரர் கோரும் ஆவண எண் 1171/2005ல் ஆவணம் எழுதிக்கொடுத்தவர்கள் மீது பதிவுச்சட்டம் 1908 பிரிவு 82ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு 13.10.2022 தேதியிட்ட கடிதமானது வடபழஞ்சி காவல் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

- மனுதாரர் 09.11.2022 தேதியிட்டு முதல்மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பிய மேல்முறையீட்டு மனுவில், பொதுத் தகவல் அலுவலர் அளித்த பதிலில் தெரிவித்தவாறு வடபழஞ்சியில் காவல் நிலையம் ஏதும் இல்லையென்றும், இந்நிகழ்வில் தொடர்புடைய நபர்களான திரு பாஸ்கரன் என்பவர் கீழக்குயில்குடி கிராமத்தினைச் சேர்ந்தவர் என்றும் திரு பாலகிருஷ்ணன் என்பவர் தணக்கன்குளம் கிராமத்தினைச் சேர்ந்தவர் என்றும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அம்முகவரிக்களுக்கான எல்லைக்குட்பட்ட காவல்நிலையங்கள் முறையே நாகமலை புதுக்கோட்டை மற்றும் திருநகர் என்றும் தெரிவித்துள்ளார். அதனைத்தொடர்ந்து பொதுத் தகவல் அலுவலரால் 09.12.2022 தேதியிட்டு வழங்கப்பட்ட தகவல்களில் ஆவண எண்.1171/2005ஐப் பதிவு செய்த நபர்கள் மீது பதிவுச்சட்டம் பிரிவு 82ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ள திருநகர் காவல் ஆய்வாளர் மற்றும் நாகலைப்புதுக்கோட்டை காவல் ஆய்வாளர் ஆகியோர்களுக்கு 02.12.2022 தேதியிட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பொதுத் தகவல் அலுவலர் 02.12.2022 தேதியிட்டு திருநகர் மற்றும் நாகமலைபுதுக்கோட்டை காவல் ஆய்வாளர்களுக்கு அனுப்பிய கடிதங்கள் குறித்து 28.03.2025 தேதியிட்டு நினைவூட்டு கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதில் மேற்படி நிகழ்வு குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தாலோ அல்லது அதுதொடர்பாக வேறு ஏதேனும் வழக்குகள் பதியப்பட்டிருந்தாலோ அதன் விவரத்தினை அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.
- இவ்வழக்கு தொடர்பாக மதுரை காவல் துணை ஆணையாளரிடம் விசாரணை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகிறது என்று

**ஆணையத்தால் கருதப்பட்டு, வழக்கானது ஒத்திவைக்கப்பட்டு, மதுரை காவல் துணை ஆணையாளர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் / 1 எண் இணை சார்பதிவாளர், மதுரை (தெற்கு) ஆகியோர்கள் ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்தும், மனுதாரர் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக காணொளிக்காட்சி வாயிலாக விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்தும் ஆணையத்திலிருந்து அழைப்பாணைகள் அனுப்பப்படவேண்டும்.**

2. அதனைத்தொடர்ந்து இவ்வழக்கு இன்று (05.06.2025) காணொளிக்காட்சி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மனுதாரர் இன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு இரா. செந்தில்குமார், பொதுத் தகவல் அலுவலர் / 1 எண் இணை சார்பதிவாளர், 1 எண் இணைசார்பதிவாளர் அலுவலகம், மதுரை மற்றும் பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திரு R. ஜெயராம், உதவி காவல் ஆணையர், CRB, மதுரை ஆகியோர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்கள்.

3. இன்றைய விசாரணைக்கு மதுரை காவல் துணை ஆணையாளர் சார்பில் ஆஜரான உதவி காவல் ஆணையர் அவர்கள் அப்போதைய மதுரை தெற்கு 1 எண் இணை சார்பதிவாளரால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது குறித்து கடிதம் மட்டுமே காவல் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டதாகவும், அக்கடிதத்துடன் எந்தவித ஆவணங்களும் இணைத்தனுப்பப்படவில்லையென்றும், மேலும், ஆவணங்கள் ஏதுமின்றி சார்பதிவாளரின் கடிதத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய இயலாது என்பதால் மேற்படி சார்பதிவாளரால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு அதன் தொடர்புடைய ஆவணங்களை இணைத்தனுப்புமாறு சம்மந்தப்பட்ட சார்பதிவாளருக்கு ஏற்கனவே காவல் நிலையத்திலிருந்து கடிதம் அனுப்பப்பட்டதாகவும், மேலும் 28.03.2025 தேதியிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு குறிப்பிட்டு சார்பதிவாளரால் திருமயம் காவல்ஆய்வாளருக்கு அனுப்பப்பட்ட கடிதமானது 21.05.2025 அன்று மத்திய குற்றப்புலனாய்வு பிரிவிற்கு (CCB) மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

4. மேலும், இந்நிகழ்வு குறித்து மத்திய குற்றப்புலனாய்வு துறையால் (CCB) ஏற்கனவே விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் மனுதாரர் மேற்படி விசாரணைக்கு சரிவர தனது ஒத்துழைப்பை அளிக்கவில்லையென்றும் பொதுத் தகவல் அலுவலர் சார்பில் இன்றைய விசாரணைக்கு ஆஜரான உதவி காவல் ஆணையர் விசாரணையின்போது தெரிவித்தார். மேற்படி அலுவலரின் கூற்றை மனுதாரர் கடுமையாக எதிர்த்தார். மேலும், காவல் நிலையத்தில் தன்னிடம் விசாரணை மேற்கொண்ட போது இந்நிகழ்வானது "Civil Dispute" சம்மந்தப்பட்டது என்று

குறிப்பிட்டு அறிக்கையில் தன்னை கையெழுத்திடுமாறு தெரிவித்ததாகவும், ஆனால் தான் அவ்வாறு குறிப்பிட்டு எந்தவித கடிதமும் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லையென்றும் விசாரணையின்போது தெரிவித்தார்.

5. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்கள் ஆகியோர்களிடம் ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில் **பொதுத் தகவல் அலுவலர் / காவல் துணை ஆணையர்** (CCB) **இந்நிகழ்வு குறித்து மனுதாரர் மற்றும் அதன் தொடர்புடைய நபர்களிடம் மீண்டும் புதிதாக விசாரணை மேற்கொள்ளவேண்டுமென்றும், அவ்விசாரணைக்கு தன்னிடமுள்ள அனைத்து ஆவணங்களையும் வழங்குமாறும் மனுதாரருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

6. மேலும் மனுதாரர் இன்றைய விசாரணைக்கு ஆஜரான திரு ஜெயராமன், உதவி காவல் ஆணையர், CRB அவர்களை நேரில் சென்று சந்திக்குமாறும், அதனடிப்படையில் மேற்படி அலுவலர் காவல் துணை ஆணையர் CCB அலுவலகத்திற்கு இவ்வழக்கு குறித்து உரிய வழிமுறைகளை எடுத்துரைக்குமாறும் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

7. ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க **பொதுத் தகவல் அலுவலர் / காவல் துணை ஆணையாளரால் மேற்கொள்ளப்படும் விசாரணையின் முடிவில் மனுதாரர் குறிப்பிடும் குற்றச்சாட்டு உண்மையெனில், அதன்தொடர்புடைய நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்யுமாறும், அவ்வாறு குற்றச்சாட்டு உண்மையில்லாத பட்சத்தில் அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு தகவல்கள் வழங்குமாறும் ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**8. மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் உத்தரவினை ஒரு மாத காலத்திற்குள் பொதுத் தகவல் அலுவலர் நிறைவேற்றுமாறும், அதுகுறித்த அறிக்கையினை 17.07.2025 அன்று பிற்பகல் ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறும் ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4272/SCIC/2022</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர், (CCB)
காவல் துணை ஆணையாளர் அலுவலகம்,
மதுரை.

திரு R. ஜெயராம்,
உதவி காவல் ஆணையர்.
மத்திய குற்ற ஆவண காப்பகம் (CRB)
மதுரை.

பொதுத் தகவல் அலுவலர்/
1 எண் இணை சார்பதிவாளர்,
1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்,
மதுரை (தெற்கு).

**<u>மனுதாரர்:-</u>**

திரு P.N. வில்லியம் தங்கராஜ்,
RS 40/63 (50B),
நான்குவழி தேசிய நெடுஞ்சாலை அருகில்,
இந்திரா நகர்,
தணக்கன்குளம், மதுரை 625 006

Copy to: File TK/PS